**O.S.No. 230/2018**

**PW1 : பாப்பாத்தி (எ) ஜெயலட்சுமி** தேதி 04.02.2026

**வா.சா.1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு 1985ல் திருமணம் ஆனது. எனக்கு 20 பவுன் நகை சீர் வரிசையாக கொடுத்தார்கள். பணம் எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய முதல் குழந்தை எனக்கு திருமணம் ஆகி 1-1/2 வருடத்தில் பிறந்தார். 2வது குழந்தை 6 வருடம் கழித்து பிறந்தார். நான் கணவர் வீட்டில் ஒரு வருடம் இருந்துவீட்டு பெற்றோர் வீட்டிற்கு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. உடல் நலம் சரியில்லாமல் என் பெற்றோர் சென்றேன். ஒரு வருடம் கழித்து கணவர் வீட்டிற்க சென்று விட்டேன்., எனக்க மன நலம் சரியில்லாமல் ஒரு வருடம் சிகிச்சையில் இந்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் தலையில் அடித்ததால் மூளையில் பிரச்சினை ஏற்பட்டு பின்னிட்டு சரியானது. அப்போது என் தகப்பனாரும் என் தம்பியும்தான் வைத்தியம் பார்த்தார்தகள் என்றால் சரியல்ல, என் அப்பாதான் கரண்ட் வைத்து வைத்தியம் பார்த்தார். கோயம்புதத்தூரில் மருத்துவனையில் சிகிசை எடுத்துக கொண்டேன். 2 வருடம் என் பெற்றோதர் வீட்டில் இருந்துஅவிட்டு பிறகு என் கணவர் வீட்டிற்கு சென்றேன். என் கணவர் ஒழுங்காக இருக்க வேண்டுமெனற் சென்னதன் பேரில் என் கணவர் வீட்டிற்கு சென்றேன். மீண்டும் என் கணவர் என்னை அடிக்க ஆரம்பித்தால் என் பெற்றோர் வீட்டிற்குச் சென்று விட்டேன். அதன் பிறகு 2வது குழந்தை பிறந்தபோது 2, 3 வருடம் என் கணவர் வீட்டில் இருந்தேன். பிறகு மீண்டும் என்னை அடிக்க ஆரம்பித்ததால் என் பெற்றோர் வீட்டிற்கு வந்து விட்டேன். என்னுடைய பெரிய மகனும் நானும் என் பெற்றோர் வீட்டில் இருந்தோம். என் பெரிய மகனை என் கணவர் அடித்து மண்டையை உடைத்தார். சின்ன மகன் என்னுடனே வந்துவிட்டார். சின்ன மகனும் கணவர் வீட்டில்தான் இருந்தார். பெரிய மகனை படிக்க வைத்தது என் கணவர்தான். 12ம் வகுப்பு வரை படிக்க வைத்தார். என் பெரிய மகனை என் அப்பாவோ என் தம்பியோ படிக்க வைக்கவில்லை. என் தம்பியின் மனைவி இறந்து சுமார் 17, 18 வருடம் ஆகிறது. என் தம்பிக்கு 2 மகன்கள். மகன்களை என் தம்பிதான் வளர்த்து வருகிறார். என் தகப்பனார் வீட்டில் நான் மேபுறத்திலும் என் தம்பி கிழபுறத்திலும் இருக்கிறோம். என் தகப்பனார்

அடமானம் வாங்கிக் கொண்டு வட்டிக்கு பணம் கொடுத்து வந்தார் என்றால் சரிதான். அந்த வரவு செலவை நான்தான் வசூல் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. என் அப்பா பெருந்துறை மத்திய கூட்டுறவு வங்கியில் டெபாசிட் தொகை வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அப்பா 1000, 500 என்று வெளியில் வட்டிக்கு கொடுப்பார். நான் எப்போது வங்கியில் முதன் முதலில் தொகையை டெபாசிட் வைத்தேன் என்றால் 30 வருடத்திற்கு முன்பு இருந்தே பெருந்துறை கூட்டுறவு வங்கியில் 1000, 2000 போதன்ற சிறு சிறு தொகைகளை டெபாசிட செய்துள்ளேன். என் தகப்பனார் சீர் வரிசையாக கொடுத்த 20 பவுன் நகைகளை 30 வருடத்திற்கு முன்பே விற்றுவிட்டு ஆடு வாங்கி மேய்த்து வருகிறேன். என் அப்பா போஸ்ட் ஆபிசிலும் விஜயமங்கலாத்தில் உள்ள வங்கியிலும் டெபாசிட் செய்திருந்தார் என்றால் விஜயமங்கலத்தில் ரூ.30,000 மும், சென்னிமலை போஸ்ட் ஆபிசில் ரூ.50,000 மும் வைப்பீடு செய்திருந்தார். பெருந்துறை மத்திய கூட்டுறவு வங்கியில் என் அப்பா தொகை எதுவும் டெபாசிட் செய்யவில்லை. மேற்படி தொகைகளுக்கு வாரிசாக என்னை தான் நியமனம் செய்திருந்தார். என் பெயரில் தற்போது எவ்வளவு டெபாசிட் உள்ளது என்றால் ரூ.4-1/2 லட்சம் கூட்டுறவு வங்கியில் உள்ளது, போஸ்ட் ஆபிசில் தொகை எதுவும் இல்லை. என் அப்பா இறக்கும்போது மத்திய கூட்டுறவு வங்கியில் ரூ.10 லட்சம் இருந்ததை என் பெயருக்கு மாற்றிக் கொண்டேன் என்றால் சரியல்ல. பூமி விவசாய பூமி அல்ல எனறும் தரிசாக உள்ளது என்றால் ஆடு மாடு மேய்ந்து வருகிறது. சோளத்தட்டு விளைகிறது. தோட்த்தில்உள்ள பூமி என் தகப்பனாருக்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே பாாகக்கறார் ஆகிவிட்டது என்றால் சரிதான். என் அப்பா தனியாகவும் என் சித்தப்பா தனியாகவும் வீடு கட்டிவிட்டார்கள். என் அப்பாவிற்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே பொதுவில் பூமி உள்ளதா? என்றால் தோட்டத்தில் உள்ள பூமி கறார் ஆகிவிட்டது. என் அப்பாவிற்கும் என் சித்தப்பாவிற்கும் பொதுவில் 16 ஏக்கர் இருந்தது. தோட்டத்தில் உள்ள பூமி சர்வே எண்.225, 227 என்றால் சரிதான். சர்வே எண். 225 என் அப்பாவிற்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே கறார் ஆகிவிட்டது. சர்வே எண்.225 ல் உள்ள என் அப்பா பெயரில் உள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்த்திருக்கிறேன். 225 ல் 8 ஏக்கர் என் அப்பாவிற்கு உள்ளது. மொத்த சொத்தில் எவ்வளவு பாகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன் என்றால் என் அப்பா சொத்தில் பாதி பங்கு கேட்கிறேன்.

பிரிவினையானதில் 8 ஏக்கரில் பாதியும் பொதுவில் உள்ள சொத்தில் 16 ஏக்கரில் ¼ பாகம் கேட்கிறேன். என் அப்பாவிற்கு மொத்தம் 16 ஏக்கர் உள்ளதில் எனக்கு 8 ஏக்கரும் என் தம்பிக்கு 8 ஏக்கரும் பங்கு உள்ளது என்று சொல்கிறேன். சர்வே எண்.309 ஐ ஏற்கனவே என் அப்பாவும் என் சித்தப்பாவும் பிரித்து ஓட்டி வந்தார்களா? என்றால், என் சித்தப்பாவிற்கு 2 பங்கும் என் அப்பாவிற்கு 2 பங்கும் இருந்ததை கிழபுறம் 2 பங்கும் மேபுறம் 2 பங்குமாக என் அப்பாவும் என் சித்தப்பாவும் ஓட்டி வந்தார்கள். மேபுறம் என் அப்பாவும் கிழபுறம் என் சித்தப்பாவும் ஓட்டி வந்தார்கள் என்றால் சரியல்ல. ரங்கசாமி, சோமசுந்தரம், வீரசங்கிலியை சக்கரமூர்த்தி, வரப்பாளையத்தைச் சேர்ந்த சுப்ரமணி ஆகியோரை எனக்கு யார் என்றே தெரியாது. மேற்படியார்கள் சொத்தை பிரிக்க பைசல் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பைசலில் என்னுடைய பங்கு சொத்தை நான் விட்டுக் கொடுத்து விட்டேன் என்றும் என்னுடைய பங்குத் தொகை ரூ.15 லட்சம் பெற்றுக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதைதான் நான் வங்கியில் டெபாசிட் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் கணவர் வீட்டை விட்டு வெளியேறி வந்துவிட்டதால் என் வாழ்க்கை தேவைக்காக மேற்படி தொகையை எனக்கு கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு எதிராக அ.வ.எண்.139/2017 என்ற வழக்கை பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்ததில் தீர்ப்பு பெற்றுள்ளார்கள் எனறால் அது எனக்குத் தெரியாது. 2017 ல் மேற்படி பூமிகளை அளந்து கல் நட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல, அவ்வாறு கல் நடவில்லை. கிழபுறத்து பூமியை 2, 3 பிரதிவாதிகள் விற்றுவிட்டார்கள் என்றால் அப்போது தெரியாது. இந்த வழக்கிற்குப் பின்னிட்டுதான் தெரிந்து கொணடேன். கிரயதாரர்கள் உடனே கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு கட்டினார்கள். அவர்கள் கட்டிடம் கட்டும்போது நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் ஆட்சேபணை செய்தேன், அவர்கள் கிரயம் வாங்கிவிட்டதாகச் சொன்னார்கள். 2018 லேயே அ.வ.எண்.139/2017 வழக்கை தெரிந்து கொண்டேன். இந்த வழக்கை நான் தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி அ.வ.எண்.139/2017 பற்றி தெரிந்து கொண்டேன். இந்த வழக்கை 2018 ல் தாக்கல் செய்தேன். சொத்து விவரங்களை இந்த வழக்கிற்கு யார் சொன்னார்கள் என்றால், நான்தான் சொன்னேன். 1 முதல் 3 பிரதிவாதிகள்

வழக்கு தாக்கல் செய்து பிரிவினை செய்து கொண்டார்கள் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும் சொத்து மதிப்பு அதிமாகிவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 2018 ல் ஏக்கர் ரூ.10 லட்சம் விலை போனது. தற்போது எவ்வளவு மதிப்பீடு என்றால் தெரியாது. சொத்தின் மதிப்பீடு ஏக்கர் ரூ.10 லட்சம் என்று வழக்கில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. நான் கேட்கும் பாதி சொத்து 8 ஏக்கரருக்கு மதிப்பீடு ரூ.25 லட்சம் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்து மதிப்பை சொல்லவில்லை. சொத்தை ஏற்கனவே நான் விடடுக கொடுத்துவிட்டேன் என்று் சொதிது மதிப்பீடு அதிகமானதால் லாபம் அடையும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.139/2017 ல் ஏற்கனவே பிரித்து அனுபவித்து வருவதன் அடிப்படைடியில்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் கிரயம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கின் தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.